## காங்கேயம் பகுதிக்கு மாட்டுப் பண்ணை

*779 வினு திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

கோவை மாவட்டம், காங்கேயம் பகுதியில் மாட்டுப் பண்ணை ஒன்று ஏற்படுத்த அரசாங்கத்தின் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, காங்கேயம் காளைகள் உலகப் பிரசித்திப் பெற்றவையாகும். தனியார் துறையில் அங்கிருந்து காங்கேய இன மாடுகளை வெளிநாடுகளுக்கு அனுப்புகிறுர்கள். அரசாங்கமே ஒரு பண்ணை அமைத்து, தரமான காளைகளை உருவாக்கவும், காங்கேயம் போன்ற மாடுகளை தமிழ்நாடு பூராவுக்கும் விற்பனைக்குக் கொண்டுவரவும் வேண்டிய வழிவகைகளைச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, காங்கேயம் கால்நடையின் தரத்தைப்பற்றி நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். காங்கேய இன மாடுகள் உழைப்புக்கேற்றவை என்பதும், தரமான காளைகள் தமிழ்நாட்டில் பரவலாகத் தேவைப்படுகிறது என்பதும் அரசாங்கத்தால் அறியப்பட்ட உண்மையாகும். காங்கேயம் பகுதியில் இரண்டு பேர் தனிப் பட்ட பண்ணைகளில் காங்கேய இனக் காளைகளை விருத்தி செய்கிறுர்கள். அதேபோல் பொலி காளைகளை உற்பத்தி செய்தும், பொலி காளைகள் இல்லா விட்டாலும், மற்ற எருதுகளை உற்பத்தி செய்தும் விற்பனை செய்கிறுர்கள். அந்த வட்டாரத்திலுள்ள விவசாயிகளும் இம்மாதிரியான காளைகளை வளர்ப் பதில் ஈடுபட்டிருக்கிறுர்கள். அந்த இனக் காளைகள் தமிழ்நாடு முழுவதற் கும் விற்கப்படுகிறது.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, காங்கேயம் பகுதியில் கால்ஷியம் சத்து நிறைந்த கொழுக்கட்டை புல் வளர்கிறது. அதனுல் அந்தப் பகுதியில் நல்ல முறையில் காளை இனம் வளர்ந்து நல்லவிதமாக விற்பனையாகிவருகிறது. இப்போது மேய்ச்சல் நிலங்கள் குறைக்கப்பட்டுள் ளன. ஒரு சிறிய இடங்கள்தான் மேய்ச்சல் பகுதியாக இருப்பதால் அந்த இன காளைகள் விரைவில் குறைந்துவிடும். ஒரு விவசாயிக்குக் குறைந்தது 4 அல்லது 5 எக்கரா அளவுக்காவது மேய்ச்சல் நிலம் என்ற வகையில் எக்ஸம்ப்ஷன் கொடுத்து விவசாயிகளுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா ? மேலும், ஏற்கெனவே இருந்த "கீ வில்லேஜ் சென்ட்டர்களை" மூடிவிட்டார்கள். மறுபடியும் அதைத் திறந்து நல்ல முறையில் உதவ அரசு முன்வருமா ?

*1972 மார்ச் 29]*

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினையைப்பற்றி இப்போது பதில் சொல்வதற்கில்லை. அந்தப் பகுதியில் பலவகையான புல் கிடைக்கிறது என்பதும், நல்ல பண்ணை அமைப்பதற்குள்ள வாய்ப்புள்ள இடமும் உள்ளதால் சிறந்த காளைகளை உருவாக்க முடியும் என்பதும் அரசாங்கம் அறிந்திருக்கிற உண்மையாகும். தனியார் நடத்துகிற பண்ணைகள் சிறந்த முறையில் நடத்தப்படுகின்றன என்று சொன்னார்கள். அப்படி இருக்கும்போது அந்த இடத்தில் அரசாங்கமே ஒரு பண்ணையை வைத்து நடத்த வேண்டுமா என்பது குறித்த விவரம் அரசின் ஆலோசனையில் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் தனியார் பண்ணைகளை நடத்துகிறார்கள். அவர்களுடைய மேய்ச்சல் நிலங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த விதிவிலக்கை இப்போது ரத்து செய்துவிட்டோம். இப்போது மேய்ச்சல் நிலங்கள் குறைந்துவிட்டது. ஆகவே, முழு அளவில் மேய்ச்சல் நிலங்களைக் கொடுப்பதற்காக அரசாங்கமாவது நிலங்களை "அக்வைர்" செய்து கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அவர்கள் சொல்வது உண்மையாக இருக்குமானல் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். மு 10
இல்லையானல் அரசாங்கம் முயற்சி எடுத்துத் தனியார் பண்ணையை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. எ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இரண்டு தனியார்கள் காங்கேயம் காளை வளர்ப்பதற்குப் பண்ணை வைத்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களிடமிருந்து காளைகள், எருதுகள் அதிக விலை கொடுத்துத்தான் வாங்கவேண்டியிருக்கிறது. ஒரு எருது ஆயிரம் ரூபாய், 1,500 ரூபாய் என்ற அளவுக்கு விற்கிறார்கள். ஆகவே, அரசே ஒரு காளை வளர்ப்புப் பண்ணையை நடத்திஞல் அதன்மூலமாக விவசாயிகளுக்குக் கொடுக்க முடியும். அதற்கு ஆவன செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கனம் அங்கத்தினருடைய கேள்வி பரிசீலனைக்குரியது. இன்றைக்கு அரசாங்கத்தின் முதல் கடமையாக இருப்பது பால் பெருக்குகிற திட்டத்தின்படி மேல்நாட்டிலிருந்து ஜர்சி போன்ற காளைகளையும், வடநாட்டிலிருந்து சிந்தி காளைகளையும் அதிகப்படுத்துவதுதான். காங்கேய இனம் உழைப்புக்குத்தான். உம்பளச்சேரி போன்ற இனங்களும் இருக்கின்றன. அவை தேய்ந்து வருகிற நிலைமையில்லாததால் அரசாங்கத்திற்கு இப்பொழுது அவற்றை வளர்ப்பதுபற்றி அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விஞக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உறையின் தொடக்கத்தில் * வெள்ளிக் குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]